அறிவிப்பு

மாவட்ட நலவாழ்வு சங்கம், திருநெல்வேலி

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை

அறிவிப்பு எண்.08/2026. நாள்: .11.2026.

பார்வை : 1. அரசாணை எண்(Ms):427 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (EAP.II-1), நாள்:18.11.2026.

2 குழும இயக்குநர், தேசிய நலவாழ்வுக் குழுமம்-TN, சென்னை-06 . அவர்களின் கடித எண்:11012724/A4/NHM/2025, நாள்:19.11.2026.

மாவட்ட நலவாழ்வு சங்கம், தேசிய நலவாழ்வு குழுமம் – தமிழ்நாடு (NHM – TN) இல் – திருநெல்வேலி சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட, அரசு மருத்துவமனைகள் மற்றும் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியோரின் கட்டுப்பாட்டில் உள்ள விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களில் (SNCU மற்றும் PICU உட்பட) தேசிய நலவாழ்வுக் குழும விதிமுறைகளின்படி ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக செவிலியர் (Staff Nurse) பணியிடங்களில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திருநெல்வேலி மாவட்ட சுகாதார அலுவலகத்திற்கு 04.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	பதவியின் பெயர்	மாவட்டத்தில் உள்ள மொத்த காலியிடங்கள்	வயது	தகுதி	மாத ஊதியம்
1.	ஒப்பந்த / தற்காலிக செவிலியர் (Staff Nurse)	51	50 வயது வரை	செவிலியர் பட்டய படிப்பு (GNM) அல்லது இளங்கலை செவிலியர் பட்டம் (B.Sc Nursing) – அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் கல்லூரி – இந்திய செவிலியர் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் பதிவு கட்டாயம்.	ரூ.21000/-

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

இதற்கான விண்ணப்பங்களை https://tirunelveli.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மாவட்ட சுகாதார அலுவலகம்,
எண்.16/22, பழைய போலீஸ் ஆஸ்பத்திரி ரோடு,
சமாதானபுரம், பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627002.

இணைக்கப்படவேண்டிய சான்றிதழ் நகல்கள்

1. Evidence of Date of Birth (Birth Certificate/SSLC/HSC Certificate).
2. Evidence of Education qualification and mark statement (10^{th},12^{th}, DGNM/ B.SC.Nursing Mark Sheet , Degree Certificate, etc.,)
3. Proof of Residency: Voter ID, Aadhar Card, Ration Card, Driving Licence and Passport.
4. Community Certificate
5. Tamilnadu Nurses and Midwives Council Registration Certificate.
6. Evidence for Tamil Eligibility (10^{th} or 12^{th} std Marks)

நிபந்தனைகள்

1. இப்பதவிகள் முற்றிலும் தற்காலிகமானது (11 மாதங்கள்)
2. இப்பணியிடங்கள் எந்த ஒரு காலத்திலும் பணி நிரந்தரம் செய்யப்பட மாட்டாது.
3. பணியில் சேருவதற்கான சுயவிருப்ப ஒப்புதல் கடிதம் (undertaking) அளிக்க வேண்டும்.
4. 50 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
5. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.
6. விண்ணப்பங்கள் அனைத்தும் அரசாணை எண்.258, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை (EAP II/2) நாள்:11.09.2026-ன்படி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் தரவரிசைப்பட்டியல் தயாரிக்கப்படும்.
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் அடிப்படையில் மட்டுமே தர வரிசைப்பட்டியல் தயார் செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்படும்

20/11/26.

செயலர் / மாவட்ட நலவாழ்வு சங்கம்
மாவட்ட சுகாதார அலுவலர்
திருநெல்வேலி.

20/11/26

தலைவர் / மாவட்ட நலவாழ்வு சங்கம்
மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி